සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Cultural Affairs
8 වෙනි මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල 8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை 8th floor, Sethsiripaya, Battaramulla
සොඳුරු දේශයක පෙරගමන්කරු வளமான தேசமொன்றின் முன்னோடி *Trailblazer of a Beautiful Nation*

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. **DCA/06/05/01/01** | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date **2026.07.24** |

ශිවුණු, හැදුණු, පිරුණු, සොඳුරු මිනිසුන් සපිරි පින්බර දේශයක් එක්ව ගොඩනගමු
அமைதியான, ஒழுக்கமான, முழுமையான சிறந்த மனிதர்களுடன் கூடிய புனித தேசத்தை ஒன்று சேர்ந்து கட்டியெழுப்புவோம்
Towards building a blessed nation of compassionate, complete and culturally rich human beings

**உள்ளக சுற்றறிக்கை இலக்கம் : 12/2026**

மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்

............................................

## 41 ஆம் கலாபூஷண அரச விருது வழங்கும் விழா - 2026

இலங்கையின் சிரேஷ்ட கலைஞர்களைப் பாராட்டி, அவர்களுக்கு அரச விருது வழங்கி கௌரவிக்கும் முகமாக, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் கலாபூஷண அரச விருது வழங்கும் விழா 2026 ஆம் ஆண்டிலும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கலாபூஷண விருது பெறுபவர்களைத் தேர்ந்தெடுக்கும் செயன்முறை பின்வருமாறு அமையும்.

1. 2026 ஆம் ஆண்டிற்கான கலாபூஷண விண்ணப்பங்கள், தனிப்பட்ட ரீதியில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நேரடியாகக் கோரப்பட மாட்டாது.
2. விருது பெறுபவர்களைத் தெரிவு செய்யும் அதிகாரம் மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட நடுவர் குழுவொன்றினூடாக மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்படும்.
3. ஒவ்வொரு மாவட்டச் செயலகங்களுக்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய விருது பெறுபவர்களின் எண்ணிக்கை இணைப்பு 01 இல் குறிப்பிட்டுள்ளவாறு பெயரிடப்படும்.
4. பிரதேச செயலகங்களில் உள்ள கலாசார விடயப் பொறுப்பு அலுவலரினால் தமது அதிகார எல்லைக்குள் இருக்கும் கலாபூஷண விருது பெறுவதற்கு மிகவும் தகுதியான கலைஞர்களின் இருப்பிடங்களுக்கு நேரடியாகச் சென்று, அவர்களின் விபரங்களைத் தாமாகவே சேகரிக்க வேண்டும் (இதற்கு முன்னர் கலாபூஷண விருது பெறாத ஒருவராக இருத்தல் வேண்டும்).

   கலாசார விடயப் பொறுப்பு அலுவலரினால் விபரங்கள் சேகரிக்கப்படாத கலைஞர்களுக்கும் வாய்ப்பளிக்கும் பொருட்டு, கலாபூஷண விருதுக்கு விண்ணப்பிப்பதற்காகப் பகிரங்கப் பத்திரிகை விளம்பரமொன்று வெளியிடப்படுமென்பதுடன், அதன் மூலமும் இவ்விருதைப் பெறுவதற்கு மிகவும் தகுதியான கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியுமென்பதுடன், கலாபூஷண விருது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, தாம் ஒரு பிரபல கலைஞர் என்பதை உறுதிப்படுத்துவதற்காக, தம்வசம் உள்ள விருதுச் சான்றிதழ்களின் பிரதிகளைப் பெற்று, அவ்விபரங்களை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து, கலைஞர் தங்களது விண்ணப்பங்களை பிரதேச செயலாளர் ஊடாக மாவட்டச் செயலாளருக்கு அனுப்ப வேண்டும். (பிரதேச கலாசாரக் குழுவின் பரிந்துரை இல்லாமலும் விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலாளருக்கு அனுப்ப முடியும்).



අධ්‍යක්ෂ / பணிப்பாளர் / Director 2872035 | කාර්යාලය / அலுவலகம் / Office 2872031 2866731 | ෆැක්ස් / தொ.நகல் / Fax 2866732 | ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail dcanews@sltnet.lk | වෙබ් ලිපිනය / இணையத்தளம் / Web Site www.culturaldept.gov.lk

5. ஒவ்வொரு பிரதேச செயலகங்களினாலும் தெரிவு செய்யப்பட்ட விருது பெறுபவர்களின் மற்றும் பிரதேச செயலாளரிடம் நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட்ட கலைஞர்களின் விண்ணப்பங்கள் உட்பட அனைத்து விபரங்களும் மாவட்ட கலாசார அலுவலரினால் சேகரிக்கப்படள வேண்டும். அவ்வாறு சேகரிக்கப்பட்ட விபரங்கள், மாவட்டச் செயலகத்தினால் நியமிக்கப்படும் ஒன்பது பேரடங்கிய நடுவர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன், அந் நடுவர் குழுவிற்காகப் பின்வரும் அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

- மாவட்ட செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஒரு பதவிநிலை அலுவலர்
- மாகாண சபையின் மாகாணக் கலாசார அமைச்சின் செயலாளர் அல்லது பெயரிடப்பட்ட வேறு அலுவலரொருவர்
- மாவட்ட கலாசார அலுவலர்
- மாவட்ட கலாசாரக் குழுவின் தலைவர்
- இன விகிதாசாரத்தின் அடிப்படையில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட ஐந்து (05) பிரதேச செயலகங்களின் ஐந்து கலாசார அலுவலர்கள்
- கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அலுவலர் ஒருவர் கண்காணிப்பு அலுவலராகப் பங்கேற்பார்

6. நடுவர் குழு தொடர்பாக ஏதேனும் திருத்தங்கள் தேவையெனில், கலாசாரப் பணிப்பாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

7. குறித்த நடுவர் குழுவினால் தமது மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள விருது பெறுபவர்களின் எண்ணிக்கையைத் தெரிவு செய்து இணைப்பு 05 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் ஊடாக 2026.09.30 ஆம் திகதிக்கு முன்னர் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெறச் செய்தல் வேண்டும். மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள விருது பெறுபவர்களின் எண்ணிக்கையை விட மேலதிகமாகத் தெரிவு செய்து அனுப்பப்பட்டு இருந்தால், பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விருது பெறுபவர்களில் இலக்கம் 01 இலிருந்து கீழ் நோக்கி பெயரிடப்பட்ட எண்ணிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டு எஞ்சிய அளவு நிராகரிக்கப்படும். அச்சுப் பிழையினேலும் மேலதிகப் பெயர்களைக் குறிப்பிடாதிருத்தல் வேண்டும். இத்தகைய சூழ்நிலைகளால் தகுதியான கலைஞர்களுக்கு அநீதி இழைக்கப்படக்கூடும் என்பதால், குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையை மாத்திரமே தெரிவு செய்து அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.
விருது பெறுபவர்களைத் தெரிவு செய்வதற்குத் தேவையான விபரங்களைச் சேகரிப்பதற்காக, இதனுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 02 மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்த வேண்டும். மேலும், இணைப்பு 03 மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி கலைஞரின் கலை வாழ்க்கை பற்றிய தகவல்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு, படிவத்தை நீங்கள் முறையாகத் தயாரித்து, அதன் அச்சிடப்பட்ட பிரதியுடன் கலைஞரின் கடவுச்சீட்டு அளவிலான மூன்று (03) புகைப்படங்களுடன் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும். அதன் மென் பிரதியை ardcultural@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும். (Font – FM Abhaya, Font Size – 12).

8. கலைஞருக்கு வழங்கப்படும் பரிசுப் பணத்திற்கான காசோலையை சரியாக எழுதுவதற்காக கலைஞரின் செயல்பாட்டிலுள்ள வங்கிக் கணக்கு புத்தகத்தின் கணக்கு உரிமையாளரின் விபரங்கள் அடங்கிய பக்கத்தின் நிழற்பிரதியொன்று கட்டாயமாக அனுப்பப்பட வேண்டும்.

9. இவ் விருது பெறுபவர்களைத் தெரிவு செய்யும் முழுமையான அதிகாரம் மாவட்டச் செயலாளர்களிடம் ஒப்படைக்கப்படுவதுடன், ஏதேனும் தவறான தகவல்கள் வழங்கப்பட்டிருப்பின் அதற்கு உரிய குழுவே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

10. எவரேனும் ஒரு கலைஞர் ஆற்றிய தேசியப் பணியை ஆழமாக ஆய்வு செய்த பின்னரே, இந்த விருதுக்கு தகுதியான "கலைஞர்" யார் என்பது தீர்மானிக்கப்பட வேண்டுமென்பதுடன், கலைஞர்கள் பின்வருமாறு வரையறுக்கப்படுகிறார்கள்.

*மேடை நாடகக் கலைஞர்கள் மற்றும் நடிப்புக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஓவிய மற்றும் சிற்பக் கலைஞர்கள், செதுக்கல் கலைஞர்கள், லாக்ஷா நெசவுக் கலைஞர்கள், மரப்பாவைக் கலைஞர்கள், நடனக் கலைஞர்கள், மேளக் கலைஞர்கள், இசையமைப்பாளர்கள், கவிஞர்கள், பாடகர்கள் மற்றும் பாடகிகள், திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நாடகக் கலைஞர்கள், பைலா இசைக் கலைஞர்கள், அங்கம்பொர கலைஞர்கள், மாயாஜால மற்றும் ஏனைய நாட்டுப்புறக் கலைக் கலைஞர்கள் ஆகியோர் இந்த அரச விருதுக்கு தகுதி பெறுகின்றனர். மேலும், தொழில்ரீதியாக அல்லது பாரம்பரியமாக இத்துறைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் குறித்து விசேட கவனம் செலுத்தி சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க முடியாத போதிலும், கடந்த 10 வருட காலம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் கலைத் துறைக்கு சிறந்த சேவையாற்றிய கலைஞர்கள் குறித்து ஆராய்ந்து, அவர்கள் சமர்ப்பிக்கும் விபரங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் காணப்படின் அவர்களைத் தெரிவு செய்ய முடியும்.*

*அரச பணியில் உள்ள ஒரு உத்தியோகத்தர், தனது தொழில் சார்ந்து ஏதேனும் கலை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால், இவ்விருதிற்கான புள்ளிகளை வழங்கும்போது அது மதிப்பீடு செய்யப்பட மாட்டாது. எனினும், தனது தொழிலுக்குப் புறம்பாக மேற்கொண்டுள்ள கலை நடவடிக்கைகள் மதிப்பீடு செய்யப்படுவதுடன், புள்ளிகளை வழங்கும்போது கவனத்தில் கொள்ளப்படும்.*

- **கலைஞர்களைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அளவுகோல்கள் :**

i. வயதுப் பிரிவு: கட்டாயமாக 2026.06.30 ஆம் திகதிக்கு 60 வயதைத் தாண்டியவராக இருத்தல் வேண்டும்.

ii. இத்துறையில் ஒரு கலைஞராகப் பணியாற்றிய காலம் 15 வருடங்களுக்கும் மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

iii. படைப்புகளை மேற்கொண்ட கலைத்துறை

iv. பாரம்பரியக் கலைஞராக இருத்தல் / பிரபல கலைஞராக இருத்தல்

v. பெற்றுக்கொண்ட வெற்றிகள் : சர்வதேச / தேசிய / மாகாண / மாவட்ட / பிரதேச ரீதியிலானவை (சமர்ப்பிக்கப்பட்ட வெற்றிகள் அனைத்தும் கலைத்துறை சார்ந்தவையா என்பது குறித்து திருப்தியடையக் கூடியதாக இருத்தல் வேண்டும்)

vi. பெற்றுக்கொண்ட பாராட்டுக்கள் அல்லது கௌரவ விருதுகள் (பெற்றுக்கொண்ட பாராட்டுக்கள் அல்லது விருதுகள் அனைத்தும் கலைத்துறை சார்ந்தவையா என்பது குறித்து திருப்தியடையக் கூடியதாக இருத்தல் வேண்டும்)

vii. மேற்கொள்ளப்பட்ட அல்லது மக்கள் மயப்படுத்தப்பட்ட கலைப் படைப்புகளின் எண்ணிக்கை

viii. கலாசாரக் குழுவின் அங்கத்துவம்

ix. சமூக சேவைச் செயற்பாடுகள்

***கவனிக்க*** *: கலைஞரிடம் சென்று அவரது விபரங்களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் மேற்கூறிய அளவுகோல்களின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என்பதுடன், சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு ஆவணமும் கலைத்துறை சார்ந்தவை என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேலும், புள்ளிகள் வழங்கும் ஆவணத்துடன் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்குரிய, இணைப்பு 02 இன் கீழ் வரும் கலைஞரின் விபரங்களைச்*

11. எவரேனும் ஒரு கலைஞர் விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்டு, அரச விருது வழங்கும் விழா நடைபெறுவதற்கு முன்னர் மரணமடைந்தால், அது குறித்து தாமதமின்றி கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்குத் அறிவித்து, அவருக்குப் பதிலாக மாவட்டத் தெரிவுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கையில் அடுத்ததாக அதிக புள்ளிகளைப் பெற்றுள்ள கலைஞரின் பெயரைப் பெயரிட்டு கலாசார பணிப்பாளருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்திருத்தம் குறித்து சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளருக்குத் அறிவித்து, மாவட்டச் செயலாளர் ஊடாக அனுப்புவதற்கு மாவட்ட கலாசார அலுவலர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

12. பரிந்துரைக்கப்பட்ட பெயர்களை கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பிய பின்னர் அது குறித்து உரிய விருது பெறுபவர்களுக்கு அது தொடர்பாக அறிவித்தல் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் கலாசார திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுமென்பதுடன் மாவட்டக் குழுவினால் எடுக்கப்பட்ட முடிவுகள் இரகசிய அறிக்கையாக கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

13. விருது பெறுபவர்களைத் தெரிவு செய்யும் போது அவர்களின் தகுதிகளைப் பரிசீலிப்பதற்காக இணைப்பு நான்கு (04) இல் குறிப்பிட்டுள்ளவாறு அளவுகோல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், நடுவர் குழுவின் இறுதி முடிவின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட விருது பெறுபவர்களின் பட்டியலை இணைப்பு ஐந்து (05) இல் உள்ளவாறு தயாரித்து, நடுவர் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் கையொப்பமிட்டு, உத்தியோகபூர்வ முத்திரையிட்டு, ஓர் இரகசிய ஆவணமாக திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும். (விருது பெறுபவர்கள் வழங்கும் படைப்புகள் அல்லது பாராட்டுச் சான்றிதழ்களின் பிரதிகள் மீண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது).

14. அதேபோன்று, நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் நடுவர் குழுக்களினால் 200 கலாபூஷண விருது பெறுபவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

15. ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவு செய்யப்படும் கலாபூஷண விருது பெறுபவர்களையும் விழாவில் கலந்து கொண்டு விருதைப் பெற்றுக்கொள்ளும் வரை நடைபெறும் அனைத்துப் பணிகள் மற்றும் அவர்களை விழாவில் பங்கேற்கச் செய்வதற்கான பொறுப்பு அந்தந்த பிரதேச செயலகங்களின் கலாசார விடயப் பொறுப்பு அலுவலரின் பொறுப்பென்பதுடன், அவர்கள் கலந்து கொள்ளாததால் ஏதேனும் அசௌகரியங்கள் ஏற்படின், அதற்குரிய முழுப் பொறுப்பையும் அந்தந்த பிரதேச செயலக கலாசார விடயப் பொறுப்பு அலுவலர்கள் ஏற்க வேண்டும் என்பதை மேலும் அறியத்தருகின்றேன்.

16. அந்தந்த மாவட்டங்களில் விருது பெறுபவர்களைத் தெரிவு செய்வது குறித்த இறுதித் தீர்மானம் மாவட்டச் செயலாளரிடமே காணப்படும்.

**கே.எஸ். தில்ஹானி**
கலாசார பணிப்பாளர்

**கலாபூஷண விருது வழங்கும் விழா 2026**
**உள்ளடக்கப்பட்டுள்ள ஆவணங்கள்**

1. சுற்றறிக்கை
2. இணைப்பு - 01 ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உரிய விருதுகளின் எண்ணிக்கை
3. இணைப்பு - 02 தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பப் படிவம்
4. இணைப்பு - 03 கலைஞரின் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்
5. இணைப்பு 03 (i). கலைஞரின் கலை வாழ்க்கை பற்றிய தகவல்கள்
6. இணைப்பு - 04 கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்
7. இணைப்பு - 05 தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் பட்டியல்
8. இணைப்பு - 06 கலாபூஷண விருது பெறுபவர்களைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அளவுகோல்களுக்கான புள்ளிகளை வழங்க வேண்டிய முறை

*இணைப்பு - 01*

**2026 கலாபூஷண அரச விருதுக்காக விருது பெறுபவர்களைத் தெரிவு செய்தல்**
**பிரதேச செயலக ஆவணம்**
**பிரதேச விருதுகளின் எண்ணிக்கை - 200**

| தொடர் இலக்கம் | மாவட்டம் | பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை | விருதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | 13 | 15 |
| 02 | கம்பஹா | 13 | 15 |
| 03 | களுத்துறை | 14 | 11 |
| 04 | காலி | 22 | 15 |
| 05 | மாத்தறை | 16 | 10 |
| 06 | ஹம்பாந்தோட்டை | 12 | 06 |
| 07 | கண்டி | 20 | 12 |
| 08 | மாத்தளை | 11 | 05 |
| 09 | நுவரெலியா | 10 | 03 |
| 10 | அனுராதபுரம் | 22 | 11 |
| 11 | பொலன்னறுவை | 07 | 04 |
| 12 | குருநாகல் | 30 | 20 |
| 13 | புத்தளம் | 16 | 08 |
| 14 | பதுளை | 15 | 07 |
| 15 | மொனராகலை | 11 | 05 |
| 16 | இரத்தினபுரி | 18 | 09 |
| 17 | கேகாலை | 11 | 05 |
| 18 | திருகோணமலை | 12 | 06 |
| 19 | மட்டக்களப்பு | 14 | 06 |
| 20 | அம்பாறை | 20 | 09 |
| 21 | யாழ்ப்பாணம் | 15 | 08 |
| 22 | மன்னார் | 05 | 03 |
| 23 | வவுனியா | 04 | 02 |
| 24 | முல்லைத்தீவு | 06 | 03 |
| 25 | கிளிநொச்சி | 04 | 02 |